பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திருமதி. ப. ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப.,

ந.க.அ3/11948/2020 நாள்:23.05.2022

பொருள் : பொது பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – பெரம்பலூர் மாவட்ட வருவாய் அலகு – குன்னம் வட்டாட்சியர் அலுவலகம் வரகூர் கிராம நிர்வாக அலுவலர் – ரகு (திரு).அ. என்பவர் 23.09.2020 அன்று பணியிடை மரணமடைந்தது – அவரது மனைவி விஜயகுமாரி(திருமதி).பெ. என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணி நியமனம் வழங்கி ஆணையிடப்படுகிறது..

பார்வை :
1. திருமதி. விஜயகுமாரி க/பெ ரகு என்பவர் விண்ணப்பம் நாள்: 27.10.2020.
2. பெரம்பலூர் சார் ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.அ1/4802/2020 நாள்: 15.12.2020.
3. குன்னம் வருவாய் வட்டாட்சியர் அவர்களின் கடிதம். ந.க. ஆ4/5217/2020 நாள்: 27.11.2020.

******

ஆணை:

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வரகூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்து வந்த திரு.அ.ரகு என்பவர் 23.09.2020 அன்று பணியிடையே காலஞ்சென்று விட்டார். காலஞ்சென்ற திரு.அ.ரகு என்பவரது மனைவி திருமதி.பெ.விஜயகுமாரி என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க கோரி அளித்த விண்ணப்பத்தின் பேரில், பெரம்பலூர் சார் ஆட்சியர் மற்றும் குன்னம் வட்டாட்சியரிடமிருந்து திருமதி.பெ.விஜயகுமாரி என்பவருக்கு பணிநியமனம் வழங்கிட பரிந்துரை செய்து முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளது. மேற்படி கருத்துருக்களை பரிசீலனை செய்யப்பட்டதில் திருமதி.பெ.விஜயகுமாரி என்பவருக்கு அவரின் கல்வி தகுதியின் அடிப்படையில் பெரம்பலூர் மாவட்ட வருவாய் அலகில் இளநிலை வருவாய் ஆய்வாளர் ஆக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

2) திருமதி.பெ.விஜயகுமாரி என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பெரம்பலூர் வருவாய் அலகில் பணியிடம் வழங்கிட பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3) இவர் பணியில் சேரும் போது அரசு உதவி மருத்துவரின் தகுதிக்கு குறையாக (Assistant Civil Surgeon) மருத்துவரிடம் உடற்தகுதிச் சான்றினை பெற்று சமர்பிக்க தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4) இப்பணி நியமனம் முற்றிலும் தற்காலிமானது. பணி நியமனம் செய்யப்பட்டுள்ள நபர் எந்த நேரத்திலும் எவ்வித முன்னறிவிப்புமின்றி பணி நீக்கம் செய்யப்படலாம் எனவும், இவர் எவ்வித முன்னுரிமையும் கொண்டாட இயலாது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5) தனியருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் 19500– 62000 (Pay Matrilx Level – 8) என்ற ஊதிய ஏற்ற முறை விகிதத்தின் கீழ் ஊதியம் வழங்கப்படும்.

ஒம்/–ப. ஸ்ரீ வெங்கட பிரியா,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
பெரம்பலூர்.

பெறுநர்

திருமதி.பெ.விஜயகுமாரி
க/பெ அ.ரகு (லேட்),
274, அம்பேத்கர் தெரு, வேலூர் கிராமம்,
பெரம்பலூர் வட்டம்,
பெரம்பலூர்.

நகல்

1. வருவாய் கோட்டாட்சியர், பெரம்பலூர்.
2. வருவாய் வட்டாட்சியர், குன்னம்.

நகல்

அ3 இருக்கை – 2
உபரி நகல் – 1

/உத்தரவுப்படி/

23/05/2022
மாவட்ட ஆட்சியருக்காக,
பெரம்பலூர்.

23/05/2022